கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஒரு ஸீட்டானால் பாதகமில்லை. ஆனால் 4 அல்லது 5 ஸீட்டுகள் பயன்படுத்தப்படவில்லை என்றால், அவசியயாகப் போகிறவர்களுக்கு இடமில்லாமல் வீணாகப் போய் விடும் என்றுதான் அரசாங்கத்திற்குப் புலப்படுகிறது.

மசால்ச்சிகள் (சம்பள விகிதம்)

* 434 **கேள்வி.—திரு. சா. கணேசன் (திரு. ஆ. தங்கவேலு சார்பாக) :** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள சில கோர்ட்டுகளில் வேலை செய்யும் மசால்ச்சிகளுக்கு எவ்வளவு மாதச் சம்பளம்?

(இ) வேறு சில கோர்ட்டுகளில் வேலைக்கு மாதச்சம்பளம் ரூ. 55 கொடுக்கப்படுவதற்குக் காரணமென்ன?

(உ) ரூபாய் 15 மாதச் சம்பளத்தை ரூ. 55 ஆக உயர்த்த உத்தேசமுண்டா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) Rupees fifteen per month.

(இ) Full-time masalchis are paid in addition to monthly pay a sum of Rs. 23 towards dearness allowance and Rs. 17 towards special compensatory allowance.

(உ) No, Sir.

சப்-மாஜிஸ்டிரேட் கோர்ட்டுகளின் கடைநிலை ஊழியர்கள்

* 435 **கேள்வி.—திரு. சா. கணேசன் (திரு. எம். பி. வடிவேல் சார்பாக) :** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சப் மாஜிஸ்டிரேட் கோர்ட்டுகளில் பணியாற்றும் கடைநிலை ஊழியர்கள் கட்டாயமாக மாதத்தில் பதினைந்து நாட்கள் சப் மாஜிஸ்டிரேட் வீட்டில் இரவு காலத்தில் படுத்துக்கொள்ள வேண்டுமென்கிற உத்தரவு நடைமுறையில் உண்டா?

(இ) உண்டென்றால், அந்தப் பதினைந்து நாட்களுக்கு அலவன்ஸ் ஏதேனும் கொடுக்கப்படுகிறதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) Peons of the Magistrates' Courts are required to sleep by turns at the residences of Magistrates so as to be ready to attend to any urgent item of work that may arise and also to guard the residences of Magistrates at nights.

(இ) No, Sir.

மாடு வாங்க பணம் உதவி.

* 436 **கேள்வி.—திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம் (திரு. கே. சீமைச்சாமி சார்பாக) :** கனம் விவசாய அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பட்டா இல்லாத அரிசனங்களுக்கு மாடு வாங்கப் பண உதவி அளிக்கப்படுகிறதா?